No. of Printed Pages : **4**

**8589**

25576

பதிவு எண் | | | | | | | |

முதலாம் ஆண்டு

# தமிழ்மொழி கற்பித்தல்

கால அளவு : 3 மணி நேரம் மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப் பதிவில் குறையிருப்பின் அவற்றை அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி - I

### பிரிவு - அ

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் **100** சொற்களுக்கு **மிகாமல்** விடையளிக்கவும். **10x2=20**

**1.** ''யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.''
- இக்குறட்பாவின் பொருள் எழுதுக.

**2.** தொழிற்பெயர் என்றால் என்ன ? அதன் வகைகளை எழுதுக.

**3.** 'உலகெலாம்' – இச்சொல்லைப் பிரித்துப் புணர்ச்சி விதி தருக.

**4.** 'காஞ்சிபுரம் என்ன விலை ?' - இத்தொடரில் வந்துள்ள ஆகுபெயரை விளக்குக.

**5.** குமரன் படித்தான், வேலா வா - இத்தொடர்கள் எவ்வகைத் தொடர்கள் என்பதை எழுதுக.

**6.** உருபு மயக்கம் என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.

[ திருப்புக

7. குரங்கு, தாவுதல், இலை, தோட்டம் – இப்பெயர்ச்சொற்களை வகைப்படுத்தி எழுதுக.

8. முதனிலை திரிந்த தொழிற்பெயரை விளக்குக.

9. வற்றல், பொரியல், அவியல், பொங்கல் - இவை எவ்வகை ஆகுபெயர் என்பதை விளக்குக.

10. வழுவமைதி என்றால் என்ன ?

## பிரிவு - ஆ

**குறிப்பு : எவையேனும் ஐந்து** வினாக்களுக்கு ஒவ்வொன்றுக்கும் **200** சொற்களுக்கு **மிகாமல்** விடையளிக்கவும். **5x4=20**

11. கீழ்க்காணும் உரைப் பத்தியைப் படித்து அதன் நடைச் சிறப்பை எழுதுக.

''கைபுனைந்தியற்றா ஓரழகே அழியா அழகெனப்படும். கைபுனைந்தியற்றும் அழகு அழியுந்தன்மையது. 'கைபுனைந்தியற்றாக் கவின்பெறு வனப்பு' என்றார் நக்கீரனாரும். கையால் செய்யப்படுவது செயற்கை. கையால் செய்யப்படாதது இயற்கை. மலையும் ஆறும் காடும் கடலும் எவர் கையால் ஆக்கப்பட்டன ? அவை எக்கருவிகளால் செய்யப்பட்டன ? ஞாயிறும் திங்களும் விண்மீன்களும் எவரால் செய்யப்பட்டன ? புனலுக்குத்தண்மை ஈந்தவர் எவர் ? நெருப்புக்கு வெம்மையூட்டினவர் யாவர் ? இயல்பாக அரும்பிய இவற்றின் அழகே கைபுனைந்தியற்றாக் கவின்பெறு வனப்பாகும். மற்றையது போலி.''

12. அடுக்குத் தொடருக்கும் இரட்டைக் கிளவிக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.

13. ஐந்தாம் வேற்றுமை எவ்வெப் பொருள்களில் வரும் ? எடுத்துக்காட்டு தருக.

14. உரையாடலை செய்தியாக்குவதற்கான வழிமுறைகள் யாவை ?

15. 'பெண் கல்வி' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுவதற்கான குறிப்புச் சட்டகம் தயார் செய்க. இக்கட்டுரையில் இடம் பெறத்தக்க பழமொழிகள், மேற்கோள்கள் ஆகியவற்றைத் தொகுக்க.

16. காரிருள், பேரிடி ஆகிய சொற்களைப் பிரித்து புணர்ச்சி விதி தருக.

17. ஏழாம் வேற்றுமையில் இடம்பெறும் தற்கிழமை, பிறிதின் கிழமைப் பொருள்களை விளக்குக.

18. வல்லெழுத்து மிகா இடங்கள் பற்றி எழுதுக.

## பகுதி - II

### பிரிவு - அ

குறிப்பு : **அனைத்து** வினாக்களுக்கும் ஒவ்வொன்றுக்கும் **100** சொற்களுக்கு **மிகாமல்** விடையளிக்கவும். **10x2=20**

19. ஒருபாலுக்கே உரிய சொற்கள் நான்கனைக் குறிப்பிடுக.

20. வட்டாரக் கிளைமொழி அறிவு ஓர் ஆசிரியருக்கு அவசியம் இருக்க வேண்டும். ஏன் ?

21. கதை கூறுவதன் நோக்கங்கள் யாவை ?

22. நா பிறழ் பயிற்சிக்குரிய இரண்டு தொடர்களை எழுதுக.

23. தொடர் செயல் வழங்குவதால் ஏற்படும் நன்மைகள் யாவை ?

24. நடிப்பு முறையினால் வளரும் திறன்கள் ஏதேனும் ஒன்றினைப் பற்றி எழுதுக.

25. மாணவ ஆசிரியர்க்கு உற்றுநோக்கல் பயிற்சி எவ்வகையில் பயன்படுகிறது ?

26. பேசுதல் திறனில் உரையாடலுக்கான தலைப்புகள் குறித்து எழுதுக.

27. மொழி கற்பித்தல் வழி எவ்வாறு பொறுப்புள்ள நல்லகுடிமகனை உருவாக்கலாம் ?

28. உரையாடல் திறனை ஊக்குவிக்க ஆசிரியர் மேற்கொள்ளும் செயல்கள் யாவை ?

### பிரிவு - ஆ

குறிப்பு : **எவையேனும் ஐந்து** வினாக்களுக்கு 200 சொற்களுக்கு **மிகாமல்** விடையளிக்கவும். **5x4=20**

29. மொழியே மனிதனுக்கு முகமும் முகவரியும் – விளக்குக.

30. மொழிப்பாடம் ஒரு திறன் பாடம் என்பதை நிறுவுக.

31. கேட்டல் திறன் வளர்க்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டியவை பற்றி எழுதுக.

[ திருப்புக

32. விளையாட்டு முறையின் நிறை, குறைகளை விவரிக்க.

33. ஆசிரியர் மாணவர்களிடம் பொருளுணர் ஆற்றலை வளர்க்க எவ்வகைப் பயிற்சிகளை வழங்கலாம் ?

34. பல்வகுப்பு கற்பித்தலில் வகுப்பறை நிருவாகம் எவ்வாறு இருக்க வேண்டும் ?

35. அபிதான சிந்தாமணி – குறிப்பு வரைக.

36. மொழிப்பாடத்தில் ஒப்படைப்புகள் எவ்வாறு அமைய வேண்டும் ?

## பகுதி - III

**குறிப்பு :** ஒவ்வொரு வினாவிற்கும் **500** சொற்களுக்கு **மிகாமல்** விடையளிக்கவும். **2x10=20**

37. (அ) கேட்டல் திறனை வளர்க்க என்னென்ன செயல்பாடுகளை வழங்கலாம் என்பதை விவரிக்க.

**அல்லது**

(ஆ) உரைநடை கற்பிக்கும் முறையை விளக்குக.

38. (அ) செயல்திட்ட முறை குறித்து விரிவாக எழுதுக.

**அல்லது**

(ஆ) பல்வகுப்பு கற்பித்தலில் உள்ள சிறப்புகளையும், பல்வகுப்பு கற்பித்தலில் ஏற்படும் இடர்ப்பாடுகளையும் திறனாய்வு செய்க.

- o O o -